தமிழ் கல்விநிலையம் – மவுண்ற்றாயிட்

Tamil Study Centre - Mount Druitt

Mobile: 0449 892 066

Email :mtdruitttsc@gmail.com *Web : www.mtsc.org.au*

ஆண்டு 7 – பேச்சுப் போட்டி 2020

பேச்சுப் போட்டி எதிர்வரும் **30.05.2020** அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

இறையடி தொழுது, தமிழினை நினைந்து, நடுவர்களை பணிந்து, அவைதனை வணங்குகின்றேன்.

இன்றைய எனது உரை

"பிழையற தமிழை தெளிவுற மொழிவோம்"

ஆதியில் தோன்றி, அழுத்தமாய் வளர்ந்து, காலத்தால் உயர்ந்து ஞாலத்தில் பரந்த, சீரிய செம்மொழி தமிழ்மொழி என்பேன். பேசவும், எழுதவும், புதுச்சொல் ஆக்கவும், இலக்கியம் படைக்கவும், இசையும் உயர்மொழி தமிழ்மொழி என்பதும் நாமறிவோம். தனக்கென எழுத்துண்டு, உச்சரிக்கும் சிறப்புண்டு. பழம்பெரும் இலக்கியங்களும் அங்குண்டு. ஈங்கிவர் தமிழை ஆங்கிலத்தில் எழுதி, அரைகுறையாய் உச்சரித்து, தமிழென்று பேசுகிறார். அது தவறென்று உணராது சரி என்றும் கொள்கிறார்கள். எழுத்தற்ற மொழி எவ்வண்ணம் வாழும் என, எங்கள் மொழிப் பெரியோர்கள் எண்ணுவதாய் தெரியவில்லை. செந்தமிழ், கொடுந்தமிழ் என்று இருதமிழ் ஈங்குண்டு. இலக்கிய நடையில் இயங்கிடும் இறைதமிழ் செந்தமிழ் என்பர். அதை சிதைத்திடவும் விரும்பார். கருத்திட மக்கள் அளவளாவும் தமிழ் கொடுந்தமிழ். அன்றாட வாழ்வில் அனுபவிக்கும் தமிழும் அதுதான். செந்தமிழ் கொடுந்தமிழ் இரண்டையும் அறிவோம். தெளிவுடன் பேசுவோம். முறையாக வாசிப்போம். ஒழுங்காக எழுதுவோம். தமிழில் உரையாடுவோம். தமிழ் எழுத்துகளை மட்டுமே பயன்படுத்துவோம். தமிழால் உயர்வோம். பிழையற தமிழை தெளிவுற மொழிவோம் என்று கூறி நிறைவு செய்கின்றேன்.

நன்றி,

வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திரு. பரமேஸ்வரன் இரங்கநாதன்.